# சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா

# வருடாந்த போட்டிகள் - 2024

## விபரங்களும் விதிமுறைகளும்

---

**போட்டிகளுக்குத் தேவையான கட்டுரைகள், சொற்கள், திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பொது அறிவு வினா-விடை என்பன எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.**

### பேச்சுப் போட்டி : பிரிவு 1 - 6

**பிரிவுகள் தலைப்பு**

பிரிவு 1 : சுவாமி விபுலாநந்தர்
பிரிவு 2 : முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர்
பிரிவு 3 : சுவாமி விபுலாநந்தரின் சமூகப்பணிகள்
பிரிவு 4 : சுவாமி விபுலாநந்தரின் கல்விப்பணிகள்
பிரிவு 5 : பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்
பிரிவு 6 : சுவாமி விபுலாநந்தரின் பன்முக ஆளுமைகள்

### நீதிநூல் போட்டி (ஆத்திசூடி) : பிரிவு - 1

* முதல் 13 ஒற்றைவரி பாக்களையும் முழுமையாக மனனம் செய்து உச்சரிப்பு பிழையின்றி கூறவேண்டும்.

### நீதிநூல் போட்டி (கொன்றை வேந்தன்) : பிரிவு - 2

* முதல் 13 ஒற்றைவரி பாக்களையும் முழுமையாக மனனம் செய்து உச்சரிப்பு பிழையின்றி கூறவேண்டும்.

### சொல்வதெழுதுதல் போட்டி : பிரிவு 3, 4, 5

பிரிவு 3 - தரப்பட்ட சொற்களில் இருந்து 15 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 4 புதிய சொற்களும் கேட்கப்படும்.
பிரிவு 4 - தரப்பட்ட சொற்களில் இருந்து 20 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 6 புதிய சொற்களும் கேட்கப்படும்.
பிரிவு 5 - தரப்பட்ட சொற்களில் இருந்து 25 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 8 புதிய சொற்களும் கேட்கப்படும்.

குறிப்பு - போட்டியாளர்கள் பெறும் புள்ளிகளில் சமநிலை காணப்படும் பட்சத்தில், புதிய சொற்கள் வழங்கப்பட்டு, அதன் பெறுபேறுகளைக் கொண்டு இறுதி முடிவெடுக்கப்படும். (Tie break)

### சுய ஆக்கம் : பிரிவு 6 (காட்சிப்படுத்தல்)

**விளக்கக்காட்சி (Presentation)**

கீழே தரப்பட்டுள்ள தலைப்பிற்கான சுய ஆக்கத்தினை 5 நிமிடத்திற்கு குறையாமலும் 7 நிமிடத்திற்கு மேற்படாமலும் தயாரித்து முன்வைத்தல் வேண்டும்.

1. சுவாமி விபுலாநந்தர் அல்லது 2. உலகின் முதல் மொழி தமிழ்

## திருக்குறள் : பிரிவு 3 - 6

**பிரிவு 3.** அதிகாரம் 16 - பொறையுடைமை **பிரிவு 4.** அதிகாரம் 23 - ஈகை
**பிரிவு 5.** அதிகாரம் 38 - ஊழ் **பிரிவு 6.** அதிகாரம் 60 - ஊக்கமுடமை

* **பிரிவு 3 - 4** தரப்பட்டுள்ள அதிகாரத்திலுள்ள முதல் 7 குறள்களிலிருந்து 4 குறள்களும் அதற்கான விளக்கமும் (தமிழில்) நடுவர்களால் கேட்கப்படும்.
* **பிரிவு 5 - 6** தரப்பட்டுள்ள அதிகாரத்திலுள்ள முதல் 10 குறள்களிலிருந்து 5 குறள்களும் அதற்கான விளக்கமும் (தமிழில்) நடுவர்களால் கேட்கப்படும்.
* முழுமையாக மனனம் செய்து பொருள் விளங்க கூறவேண்டும்.
* போட்டியாளர்கள் தாம் கூறவேண்டிய குறள்களை தாமே தெரிவு செய்ய வேண்டும். அவை இலக்கமிடப்பட்டு பேழையில் வைக்கப்பட்டிருக்கம்.

- குறள்களையும் விளக்கத்தினையும் உச்சரிப்புப் பிழையின்றி கூறவேண்டும்.

## சிறுகுறிப்பு எழுதுதல் : பிரிவு 5, 6

*கீழே தரப்பட்டுள்ள மூன்று தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து அதுபற்றி சுயமாக 5 வசனம் எழுதுதல் வேண்டும்.
* தலைப்பிற்கேற்ப வசனம் அமைந்திருத்தல் வேண்டும்.
* எழுத்துப் பிழையின்றி, உறுப்பமைய நேர்த்தியாக எழுதப்படல் வேண்டும்.
* நிறுத்தக் குறிகள் பொருத்தமான இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**தலைப்புகள்** :

1. நீர் அறிந்த தமிழ்ப் பெரியார்
2. உமது தாய் நாடு
3. நயகரா நீர் வீழ்ச்சி

## பொது அறிவுப் போட்டி : பிரிவு 5, 6

தரப்பட்டுள்ள 60 வினாக்களில் இருந்து 40 வினாக்களும் மேலதிகமாக இவை போன்ற 10 வினாக்களும் கேட்கப்படும். போட்டியாளர், கேட்கப்படும் வினாவிற்குரிய சரியான விடையினை, தரப்படும் மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்ய வேண்டும்.

குறிப்பு : போட்டியாளர்கள் பெறும் புள்ளிகளில் சமநிலை காணப்படும் பட்சத்தில், புதிய வினாக்கள் வழங்கப்பட்டு அதன் பெறுபேறுகளைக் கொண்டு இறுதி முடிவெடுக்கப்படும். (Tie Break)

## பொது விதிமுறைகள் :

- வினாத்தாள்கள் யாவும் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வைத்தே வழங்கப்படும்.
- பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்கு போட்டியாளர் தமது மருத்துவ அட்டை (Health Card) அல்லது பிறப்புச் சான்றிதழ் (Birth Certificate) ஆகியவற்றில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- சகல போட்டிகளும் **July 20, 2024** காலை **9:30** மணிக்கு ஆரம்பிக்கப்படும். **9:00** மணிக்கு போட்டியாளர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- பதிவுக்கட்டணம் - **ஒரு போட்டிக்கு 15 டொலர்கள், மேலதிகமான ஒவ்வொரு போட்டிக்கும் 10 டொலர்கள். (**போட்டி நடைபெறும் தினத்தன்று செலுத்தப்பட வேண்டும்).
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- விண்ணப்பப்படிவங்களை இறுதித் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பூர்த்தி செய்யலாம் அல்லது vipulamcanada@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
- போட்டியாளர்கள் தங்கள் வயதிற்குரிய பிரிவில் மட்டுமே போட்டியிட முடியும்.

## விண்ணப்ப முடிவுத் திகதி - July 15, 2024

**தொடர்புகளுக்கு : 416 844 3304 / 647 224 8871 / 647 629 9395 / 647 861 8240**